யாழ்ப்பாணம்

TYPEWRITERS
Sales
&
Service
FUDO, 39/17, Power House Rd
3rd Lane, Jaffna.

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

ஏடு 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 27 செவ்வாய்க்கிழமை 11-08-1992 UTHAYAN - A lively National Tamil Daily இதழ் 257

ரைப்ரைட்டர்
வாங்கவும் - விற்கவும்
திருத்தவும்
தமிழ் - ஆங்கிலம்
ரைப்பிங் வேலைகளுக்கும்
FUDO
OFFICE MACHINE CO.
39/17, மின்சார நிலைய வீதி,
3-ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திடீர்த் தாக்குதல் ஏற்படுத்திய கிலி!

‘சுப்பசோனிக்’ விமானங்கள் நாவற்குழியில் குண்டு வீச்சு!

இளம் தாய் பலி; ஐவர் காயம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 11

நேற்றுக் காலை 6.30 மணியளவில் — விடிந்து வரும் வேளையில் — ஸ்ரீலங்கா விமானப் படையின் ‘சுப்பசோனிக்’ விமானங்கள் நாவற்குழிப் பகுதியில் திடீரென நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களினால் யாழ்ப்பாணப் பகுதியில் பெரும் கிலி ஏற்பட்டது. அந்தக் கண்மூடித்தனமான தாக்குதலில் இளம் தாய் ஒருவர் குண்டு வீச்சில் பலியானார்; ஐந்து பேர் காயமுற்றனர். கட்டடங்கள் உடைமைகள் சேதமுற்றன.

நேற்றுக் காலை பொழுது புலர்ந்து வரும் சமயம் யாரும் எதிர்பார்த்திராத வேளையில் திடீரென வந்த இரு 'சுப்பசோனிக்' விமானங்களில் ஒன்று நாவற்குழிப் பகுதியில் முதலில் இரண்டு குண்டுகளை வீசியது.

குண்டுகள் பெரும் அதிர்வுடன் வெடித்த பின்னரே 'சுப்பசோனிக்' விமானங்களின் சத்தம் கேட்டன.

குண்டுவெடிப்பு அதிர்வையும், அதைத் தொடர்ந்து பேரிரைச்சலைக் கிளப்பிய வண்ணம் இங்கும் அங்கும் மிக வேகமாக வானத்தைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நிலத்தில் கிணறுகள் தோண்டிய குண்டுகள்!

யாழ்ப்பாணம், ஆக. 11

நாவற்குழிப் பகுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சின் போது "சுப்பசோனிக்" விமானங்கள் வீசிய குண்டுகள் விழுந்து வெடித்த இடங்களில் பெரும் கிடங்குகள் ஏற்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் 20 அடி ஆழமும் சுமார் 35 அடி அகலமும் கொண்ட நான்கு பெரிய குழிகள் — கிணறுகள் போன்று காணப்படுகின்றன. நேற்று கண்டி வீதி வழியாகச் சென்றவர்கள் பெரும் எண்ணிக்கையில் கூடி அந்தக் குழிகளைக் கண்டு வியந்ததைக் காண முடிந்தது.

மணற் பாங்கான அந்தப் பகுதியில் குண்டு வெடிப்பினால் வாரி இறைக்கப்பட்ட மணற் புழுதி அங்கு அரை மைல் சுற்றளவுப் பிரதேசத்தில் நின்ற மரங்கள் மீது படிந்து காணப்பட்டது.

குண்டு வீச்சினால் கண்டி வீதியில் 20 அடிக்கு பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது.

நேற்று வீசப்பட்ட குண்டுகளில் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்ட ஒரு குண்டு விடுதலைப் புலிகளால் நகரின் பல பகுதிகளில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

(உ-3-5)

சமஷ்டி அரசமைப்புப் பற்றி தெரிவுக்குழு இன்று ஆராய்வு

கொழும்பு, ஆக. 11

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழு இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடுகிறது.

இன்றைய அமர்வின்போது, ஒற்றையாட்சி அமைப்பு முறைக்குப் பதிலாக சமஷ்டி அரசமைப்பு முறை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடும் என்றும் "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

ஒற்றையாட்சி முறைக்குப் பதிலாக சமஷ்டி அரசமைப்பு முறையை கொண்டு வருவது பற்றி பரவலாகப் பேசப்படுவதாகவும் சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவில் நம்பிக்கை வைத்துள்ள பலரும், அண்மைக் காலமாக நடைபெற்ற குழுவின் அமர்வுகளில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டது குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் —

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கில் பணிபுரியும்

சர்வோதய ஊழியர்கள் கூண்டோடு வேலை நீக்கம்!

கொழும்பு, ஆக. 11

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சர்வோதய ஊழியர்கள் அனைவருக்கும் வேலை நீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் தொடக்கம் 1993 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வடக்கு - கிழக்கில் பணிபுரியும் சர்வோதய ஊழியர்கள் அனைவரும் வேலை இழப்பர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பல நூற்றுக்கணக்கானோர் இவ்வாறு வேலை இழக்கவிருக்கிறார்கள்.

இது தொடர்பாக மேற்படி ஊழியர் அனைவருக்கும் வேலை நீக்க அறிவித்தல்கள் சர்வோதய இயக்க நிறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

இணக்க மன்றின் பணிகள் இனி காவல் துறையிடம்!

யாழ்ப்பாணம், ஆக. 11

தமிழீழ இணக்கமன்றுகள், ஆரம்ப நீதி மன்றங்கள் ஆகியவற்றினால் விசாரணை செய்யப்பட்டுவந்த பிணக்குகள் யாவும் தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பான விசாரணைகளை காவல் துறையினரே தொடர்ந்து மேற்கொள்வர்.

தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

தமிழீழ இணக்க மன்றுகள், ஆரம்ப நீதி மன்றுகள் யாவும் அண்மையில் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவற்றின் பணிகள் காவல் துறையினரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

வெலிகந்தைச் சம்பவம்: 24 தமிழர் படுகொலை

பொலன்னறுவை — மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லையில் உள்ள வெலிகந்தைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்தில் படுகொலையுண்ட தமிழர்களின் எண்ணிக்கை 24 என அறிவிக்கப்படுகிறது. மேலும் 8 தமிழர் படுகாயமடைந்தனர்.

முஸ்லிம் குண்டர்களினால் இவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ-3)

ஷெல், பீரங்கி தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 11

வவுனியா முகாமில் இருந்து நேற்று முன்தினம் தமிழ்க்கிராமங்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை முல்லைத்தீவு கடற்பகுதியில் தரித்துள்ள பீரங்கிப்படகுகளிலிருந்து காட்டுப்பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. (உ-8)

பட்டாசு கொளுத்தி மகிழ்ந்ததால்

பாலையூற்றுத் தமிழர் படையினரால் கைது!

யாழ்ப்பாணம், ஆக. 11

தீவுப்பகுதியில் ஸ்ரீலங்காப் படைத் தளபதிகள் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து திருகோணமலை பாலையூற்றுப் பகுதி மக்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் ஸ்ரீலங்காப் படையினர் அந்தக் கிராமத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தி 20 தமிழ் மக்களைக் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொப்பேயின் இறுதிச் சடங்கில் அரச எதிர்ப்புக் கலவரம் மூண்டது!

கல்வீச்சில் அமைச்சர் காயம்; பலர் தாக்கப்பட்டனர்

கொழும்பு, ஆக. 11

லெப்டினன்ட் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகள் நேற்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடந்தபோது பெரும் குழப்பம் ஏற்பட்டது.

ஆத்திரமுற்ற மக்கள் அமைச்சர்களை நோக்கி கற்களை வீசியும், அரச ஆதரவாளர்களைத் தாக்கியும் வாகனங்களை நொருக்கியும் வன்செயல்களில் ஈடுபட்டனர்.

கல்வீச்சுக்கு இலக்காகி அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க காயமடைந்தார்.

ஆத்திரமுற்ற மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்த படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தனர்.

மரணச் சடங்கில் கலந்து கொள்ள லட்சக்கணக்கான மக்கள் கனத்தையில் திரண்டனர்.

ஆனால் அவர்களை பொலிஸார் கனத்தை மயானத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை, இதனால் கோபமுற்ற மக்கள் அரச எதிர்ப்பு வன்செயல்களில் ஈடுபட்டனர். அரசுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இறுதிச் சடங்கு முடிவடைந்தபோது நிலைமை மேலும் மோசமடைந்தது;

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடற்படைத் தளபதி மயிரிழையில் தப்பினார்!

அராலித்துறைக் கண்ணி வெடித் தாக்குதலில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ மயிரிழையில் உயிர் தப்பினார்.

நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

தாக்குதல் நடந்த நேரம் கிளான்ஸி பெர்னாண்டோவும் அங்கு இருந்தார் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

‘கொப்பே’ ஆஸ்பத்திரி ‘விமல’ பாடசாலை

பிரேமா சூட்டிய புதுப்பெயர்கள்

கொழும்பு, ஆக. 11

தம்புள்ளவில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிக்கு டென்சில் கொப்பேகடுவவின் பெயரும் —

அங்குள்ள எனாமலுவ மகா வித்தியாலயத்துக்கு விஜய விமலரத்தினாவின் பெயரும் —

கலிஷ்ட மகா வித்தியாலயம் ஒன்றுக்கு கடற்படைக் கொமடோர் மொஹான் ஜயமஹாவின் பெயரும் சூட்டப்பட்டன.

தம்புள்ளவிற்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி பிரேமதாஸா படையினரின் பெயர்களை அவர்களின் நினைவாகச் சூட்டினார் என்று அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா படைக்கு மேலும் ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஆக. 11

ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு மேலும் ஆட்கள் சேர்க்கப்படவிருக்கின்றனர்.

இது தொடர்பான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 14, 15, 16 ஆம் திகதிகளில் கொழும்பு, பனாகொடை, அநுராதபுரம், கண்டி, காலி, மாத்தறை, மின்னேரியா, குருநாகல், தியத்தலாவை, அம்பாறை ஆகிய இடங்களில் உள்ள இராணுவ அலுவலகங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

தெற்கில் இனக்கலவரம் மூளலாம் என அச்சம்

கொழும்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் — குறிப்பாகத் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் — பெரும் பதற்ற நிலை உருவாகி இருப்பதாக ஏஜன்சிச் செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன.

இனக் கலவரம் மூளக் கூடும் என்று தமிழர்கள் அச்சத்துடன் இருப்பதாகவும்—

கலகம் மூளலாம் எனக் கருதி அப்பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அராலித்துறைக் கண்ணி வெடித்தாக்குதலில் உயிரிழந்த அதிகாரிகளின் இறுதிச் சடங்குகள் நேற்று நடைபெற்ற கொழும்பு, கொருவல, கண்டி, நீர்கொழும்பு, குருநாகல் ஆகிய இடங்களில் லட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர் என்றும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் நேற்றுப் பதற்றம்:

தமிழ் வர்த்தகருக்குத் தீ! சலூன் மீது குண்டு வீச்சு!!

கொழும்பு, ஆக. 11

உயர்படை அதிகாரிகளின் உயிரிழப்புக்குப் பழிவாங்கும் நோக்குடன் நேற்றுக் கொழும்பில் தமிழ் வர்த்தகர் ஒருவருக்குக் கும்பல் ஒன்று தீ மூட்டியதாக ஜேர்மன் வானொலி தெரிவித்தது.

ஆனால் அவர் உயிரிழந்தாரா இல்லையா என்ற விவரம் செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கவில்லை.

இதே வேளை வெள்ளவத்தையில் உள்ள தமிழருக்குச் சொந்தமான சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றுக்குப் பெற்றோல் வீசப்பட்டு எரிக்கப்பட்டது.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது.

புனாணையில் 50 தமிழர்கள் இராணுவத்தால் படுகொலை!

நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம்; ஞாயிறன்று கொடூரம்

யாழ்ப்பாணம், ஆக 11

மட்டக்களப்பு மாவட்டம் பள்ளமடுவுக்கு அண்மையில் — புனாணைப் பகுதியில் — நேற்று முன் தினம் சுமார் ஐம்பது அப்பாவித் தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் படுகொலையுண்டனர் என அறிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் [illegible] வெட்டுக் காயங்களுக்கும் உள் [illegible] கப்படுகின்றது.

ஞாயிறு பிற்பகல் 2.30 மணியளவில் அப்பகுதிக்குச் சென்ற படையினர், எல்லைப் புறத்தில் இருந்த நூற்றுக்கும் அதிகமான தமிழ் மக்களை ஏமாற்றி அழைத்துச் சென்று அவர்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர் என்று கூறப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அட்டகாசத்தினால் சூட்டுக்காயங்களுக்கும், கத்தி வெட்டுக் காயங்களுக்கும் உள்ளான தமிழ் மக்களுள் தப்பிப் பிழைத்த ஏனையோரும் திசை தெரியாது தப்பி ஓடியுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்கு இலக்கான பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்களில் பெண்கள், ஆண்கள், குழந்தைகளும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

காட்டின் மரம் உயர
நாட்டின் தரம் உயரும்

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்லின மரக்கறி மற்றும் பழமரநாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்கான தற்காலிக விற்பனை நிலையம். நல்லை ஆதீனம் அருகில். சைவவித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி. [22100]

Sony T. V., வீடியோ, National Radio F. H 3 240 Watts With Record Player மற்றும் மின்சாரப் பொருள்கள் தொடர்பு: 353C, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [5247]

பணம் தவறிவிட்டது

கறுப்பு நிற டயறிக் கவர் ஒருதொகை கோவில் செலவுக்குரிய பணத்துடன் 8-8-92 காலை அச்சுவேலியில் இருந்து புத்தூர் ஊடாக சுத்தரோடைக்கு செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம் காவல் நிலையத்திலோ அல்லது சி. இரத்தினசுவாமி, தலைவர், கலைமகள் சனசமூக நிலையம் அச்சுவேலி வடக்கு என்ற முகவரியிலோ தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும் [22108]

புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம். [5237]

O/L மாணவர்களுக்கு

O/L மாணவர்களுக்கு ஆறு வருட கடந்த கால வினாத்தாள் தமிழ்மொழி பெயர்ப்புடன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி 3126]

வெளிவந்துவிட்டது

ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறச் சிறந்த வழிகாட்டி. தமிழ்மொழி - செயல் நூல் [புதிய பதிப்பு] மாதிரி வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஆக்கம்: த. துரைசிங்கம், B. A (Hons), Dip in Ed., வெளியீடு: ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [22111]

வவுனியாவில் படையினர் உஷார் நிலையில்

அராலித்துறையில் கடந்த சனியன்று இடம்பெற்ற புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் படை உயர் அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து வவுனியாப் பகுதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது

இனமோதல்கள், வன்முறைகள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே அங்கு இந்நடவடிக்கைகள் கடந்த சனிக்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் முக்கிய இடங்களில் ஆயுதம் தாங்கிய பொலீஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். (இ-5)

ராணுவத் தளபதி பலாலி விஜயம்

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன நேற்று முன்தினம் ஞாயிறன்று பலாலிக்கு அவசர விஜயம் மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. அவருடன் கடற்படைத் தளபதியும் சென்றிருந்தார்.

அராலித்துறையில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி படை உயர் அதிகாரிகள் பலர் பலியானது பற்றிய விசாரணைகளை நடத்துவதற்காகவே அவர் அங்கு சென்றதாக கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவித்தன. (இ-5)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்: 12 — 05 — 1924

ஆண்டவன் மடியில்: 12 — 07 — 1992

அமரர் நல்லதம்பி இராசையா

புத்திரர் அனைவரையும் சமுத்திரத்திற்கப்பால் அனுப்பி,
அனைத்திற்கும் நான் உண்டு என ஆறுதல் எமக்களித்து,
நாம் நம்பியிருக்கும் வேளையில் நடுக்கடலில் விட்டு விட்டு,
ஆறாத்துயரில் எம்மை அந்தரத்தில் தவிக்கவிட்டு
ஆண்டவனைத் தேடி அவ்வுலகம் சென்றுவிட்டீர்.
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதில்லை என மனம் ஆறி
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

எமது அருமைத் தந்தையாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றி பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்களது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
[5245]

41ஆம் நாள் என் நினைவாக....

வீர ஜனனம்: 28 — 12 — 1974

வீரச் சாவு: 03 — 07 — 1992

வீரவேங்கை இயல்வாணன்

[கஸ்ரோ]

(சோமசுந்தரம் கமலநாதன்)

[வாரிவளவு, காரைநகர்]

கண்கலங்கி குரலடைக்க
கவலையுறும் என்னவரே
விண்கலந்தேன் என்றெண்ணி
வீணாகப் புலம்புவதேன்?
மண்கலந்தேன் தமிழீழ
மாவீரன் எனச் சிறந்தேன்
என்கலந்த என்தகம்
இருப்பவர் நீர் போகீரோ?

சிதைந்திட்ட என்னுடல்
சிந்தியசெந் நீரெல்லாம்
விதைத்திட்ட என்னுயிரில்
வித்துகளாய் வெடித்தெழும்
அதைத் திடமாய் நம்பி
அணிவகுத்தென் அடி தொடர்வீர்
இதைத்தான் என் ஆன்மா
இரக்கிறது உங்களிடம்

மாவீரன் இயல்வாணன் (கஸ்ரோ)

நிதர்சனம் நிறுவனத்தில் தொழில் நுட்பவியலாளராகவும், வீடியோ படப்பிடிப்பாளராகவும் புலிகளின் குரல் செய்தி சேகரிப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் கடமை ஆற்றி, 03-07-1992 இல் கடைக்காடு யுத்தத்தின் போது செய்தி சேகரிப்பு பணியிலும், படப்பிடிப்பிலும் ஈடுபட்டிருந்த வேளை வீரமரணமடைந்த எமது மைந்தனின் புகழுடலிற்கு இறுதி அஞ்சலி செலுத்த சுன்னாகம் மேஜர் காசி வீதியில் உள்ள எமது இல்லத்திற்கும், நிதர்சனம் நிறுவனத்திற்கும், வருகை தந்த போராளிகள், அன்பர்கள் அனைவருக்கும், எமது நன்றியைத் தெரிவிப்பதோடு எமக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய நிதர்சன நிறுவனத்தின் பொறுப்பாளர், கஸ்ரோவின் நண்பர்கள், மற்றும் அங்கு கடமை புரிவோர் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதில் மனம் நிறைவடைகிறோம்.

நாளை 12-08-1992 இல் எமது மைந்தனின் 41 ஆம் நாள் நினைவு தினத்தன்று சுன்னாகம் மேஜர் காசி வீதியில உள்ள எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிரியைகளிலும், தொடர்ந்து வழங்கவிருக்கும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்

மேஜர் காசி வீதி.
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
[illegible]

புதிய மினிபஸ் சேவைகள்

தென்மராட்சி தனியார் மினிபஸ் ஒன்றியத்தினர் இன்று முதல் மேலும் சில புதிய மினிபஸ் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளாலியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், சாவகச்சேரியிலிருந்து தனங்களப்பு ஊடாக யாழ்ப்பாணத்திற்கும், சாவகச்சேரியிலிருந்து பெருங்குளம், மட்டுவில் சந்தி ஊடாக கன்னாகத்திற்கும் இச்சேவைகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. [த-117]

ECALOM மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 1993

பகுதி I தேசிய வருமானம்
பகுதி II வரவு செலவுத்திட்டம்

ஆரம்பம்:- 11-08-1992

குறிப்பு:-
- ★ இன்னும் சொற்ப மாணவருக்கே அனுமதி உண்டு.
- ★ தேசிய வருமான சம்பந்தமான பயிற்சிக் கணக்கு ஏறக்குறைய 40 கணக்கு செய்யப்படும்.
- ★ செவ்வாய், வியாழன் 4 மணி

பொருளியல்: திரு. உதயன்

(சி/3107)

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இமெல்டா பொன்றோஸ் டோமினிக்

அன்று அவனியில்: 15—05—1933

ஆண்டவர் அரவணைப்பில்: 13—08—1989

மூன்றாண்டு முடிந்ததம்மா! முத்தான எங்கள் சொத்தே!
முடிவில்லா துயரமதில் மூழ்கித் துடிக்கும் எம்மைத்
தாயாயிருந்து நீ தாலாட்டி வளர்த்த நாட்கள் தான் வருமோ
ஓயாத மனத் துயரில் மீளாத சோகமதில் நாளாக நாளாக
நலிந்து மெலிந்துனது நினைவாலே நிதமிங்கே வாடுகின்றோம்
வந்திடவே மாட்டாயா மம்மி! மகராசி! மீண்டும் வரவேண்டும் நீ

உன் பிரிவால் துன்புறும்;
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்,
அயலவர்.

இவரின் ஆத்ம சாந்திக்காக கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 12-08-1992 காலை 6-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

[22048]

---

4 ஆவது ஆண்டு நீத்தார் நினைவஞ்சலி

மலர்ந்தது: 13 - 04 1916

ௐ

உதிர்ந்தது: 27 - 07 - 1988

திருமதி வைரமுத்து நாகம்மா

அம்மா! தெய்வத்தாயே!

இற்றைக்கு 4 வருடங்களுக்கு முன் இதே ஒரு நாளில்......

தேவர்கள் வாழ்த்துப்பாட - தெய்வங்கள் ஆசிகூற
கண்ணியமாக வாழ்ந்து - கௌரவமாகக் கடமைகளைச்
செய்து முடித்துவிட்ட கம்பீரத்தோடு -
வானவர் நாட்டுக்குத் தாங்கள் வழிநடந்த
சம்பவத்தைக் கண்ணீரோடு இன்று
நினைவு கூருகின்றோம்!

கலட்டி விநாயகன் கழலிணையடிகளில் தாங்கள்
பேரா இயல்பைப் பெரும்பேறெய்தப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் தங்கள்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.

புங்குடுதீவு 11ஆம் வட்டாரம்.
[22114]

சங்கக் கிளை திறந்து வைப்பு

யாழ்ப்பாணம் ஆக. 11

யாழ். ப.நோ.கூ.சங்கத்தின் கிளை ஒன்று குருநகரில் நேற்று திறந்துவைக்கப்பட்டது. யாழ். ப.நோ.கூ.சங்க தலைவர் திரு.கு.சிறில் கிளையைத் திறந்துவைத்தார்.

கடற்புலிகள் பிரமுகர் திரு.சிவலிங்கம், வண.பிதா பி.எம். இம்மனுவேல் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (உ-3)

சகல பாண் உற்பத்தியாளர்கட்கும்

கலந்துரையாடல்

இடம்:- விடுதலைப் புலிகள் அரசியல்துறை மாவட்டச் செயலகம், கோண்டாவில்

காலம்:- 12 - 08 - 1992 புதன் கிழமை காலை 10 மணி,

விடயம்:- பாண் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள், இதுவரை சங்கத்தில் பதிவு செய்யப்படாமல் இயங்கும் பேக்கரி உரிமையாளர்கள் சகலரும் தவறாது சமூகம் தரும்படி கேட்கப்படுகின்றனர்.

த. சிவசுப்பிரமணியம்.
(தலைவர்)

பேக்கரி உரிமையாளர் சங்கம்,
யாழ். மாவட்டம்.
(22116)

யாழ்ப்பாண மாநகர சபை

கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கடைகளுக்கு யாழ். மாநகரசபை ஆணையாளரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 100/-உம், கேள்விப் பிணைப்பணம் ரூபா 2500/-உம் செலுத்தி கேள்விப் படிவங்களை நல்லூர் பிரதான அலுவலக நானாவித இறைவரிப்பகுதிக் கிளையில் 20-08-92 வியாழக்கிழமை பி. ப. 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் 21-08-92 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் இன்ன இலக்க கடைக்கான கேள்வி எனக் குறிப்பிட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் பி. ப. 2-30 மணிக்கு திறந்து ஆராயப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி பிரசன்னமாக இருக்கலாம். மேலதிக விபரங்களை நானாவித இறைவரிக் கிளையில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

கடைகளின் விபரம்	மாத வாடகை	ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை
அ. பெரியகடைப்பகுதி சத்திரச்சந்தைக் கடை இலக்கங்கள் 8, 11, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 27, 29, 31, 33, 35, 36, 37, 38, 39, 40, 42, 50, 53, 55, 56, 57, 58.	168-75	7500/-
ஆ. நல்லூர் கடை இல. 04	119-00	15100/-

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
10-08-1992.

மாநகர ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.
[சி/3038]

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 11 — 02 — 1910

உதிர்வு: 25 — 07 — 1991

அமரர்

அப்பாக்குட்டி பொன்னுத்துரை

(சொக்கர்)

திதி: 11—08—1992

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றதையா! உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்கா.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

93/3, கைலாசபிள்ளையார்
கோவில் வீதி,
நல்லூர்.
[22075]

உதயன்

பிரதமரின் சுடலை ஞானம்

ஊர்காவற்றுறையில் அராலிச் சந்தியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா அரச படைகளின் உயர்நிலை அதிகாரிகள் பலியானது குறித்து தென்னிலங்கை முழுவதுமே துக்கத்தில் ஆழ்ந்துள்ளது. அனுபவம் வாய்த்த படைத் தளபதிகள் இல்லாத குறையை நினைத்துகூடப் பார்க்க முடியவில்லை என்று இராணுவ அதிகாரிகள் ஆதங்கப்படுகிறார்கள். கட்சி பேதமற்ற முறையில் உயர் அரசியல்வாதிகள் தொடக்கம் அடிமட்டத்தில் உள்ள பொதுமக்கள் வரை அவர்களின் மரணத்தைப் பேரிழப்பாக உணர்கிறார்கள்.

எத்தனை வேறுபாடுகள் மன வேற்றுமைகள் இருந்தாலும் இன உறவின் உணர்வு அவர்களுக்கு இருக்காமலா போகும்?

அனுபவம் மிக்க போர் வல்லுநர்களின் இழப்பு அவர்களுக்குப் பேரிழப்பே. அந்தப் பேரிழப்பின், பேரிடியின் தாக்கம் துக்கமாக மாறுவதில் வியப்பில்லை ஒன்பது அதிகாரிகளுக்குமாக தென்னிலங்கை முழுவதுமே அழுகிறது!

கடந்த இரண்டு வருடங்களாகத் தமிழ் மண்ணில் எத்தனை தமிழர்கள் இறந்தார்கள்? எத்தனை பேர் ஊனமுற்றார்கள்? எத்தனை பெண்கள் விதவைகள் ஆனார்கள்? எத்தனை இளசுகள் அனாதைகள் ஆனார்கள்? அத்தனை ஆயிரம் பேரின் இழப்புக்கும், துன்ப துயரத்துக்கும் காலான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டவர்கள், திட்டம் போட்டவர்கள், செயற்பட்டவர்கள் அராலியில் அந்திமம் கண்ட அதிகாரிகள் தான். அது குறித்து எந்தச் சிங்களராவது சிந்தனை செய்தால் இழப்பின் சோகம் குறைந்து போகும்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சரியான வழி அரசியல் தீர்வுதான் என்பது தெரிந்தும், இராணுவத் தீர்வை நாடி பெரும் யுத்தம் ஒன்றை நடத்த முடிவுசெய்த ஜனாதிபதி பிரேமதாசாவும் உயரதிகாரிகளின் இழப்பு நாட்டை துயரத்தில் ஆழ்த்தியுள்ளதாக தமது தரப்பின் தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளார்.

அவரைவிட பிரதமர் விஜேதுங்க, படை அதிகாரிகள் பலியுண்ட செய்தி கேட்டுத் தளர்ந்து போனதையும், அந்தத் தளர்ச்சியில் அவருக்கு "சுடலை ஞானம்" ஏற்பட்டதையும் பார்ப்போம்.

ரஞ்சன் விஜேரத்னாவின் மரணத்தைத் தொடர்ந்து பாதுகாப்புத் துணை அமைச்சராகவும் பதவி ஏற்றார் விஜேதுங்கா. அவர் மென்மையான சுபாவம் உடையவராதலால் போரின் வீச்சைக் குறைத்து, அரசியல் தீர்வை வலியுறுத்தக்கூடும் எனப் பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவரோ தான் ரஞ்சனை விஞ்சியவர் என்று காட்டினார் இதுவரை யுத்தம் தான். அதன் பின்னரே அரசியல் தீர்வு என்று நாடாளுமன்றத்தில் 'கர்ச்சித்தார்'!

அந்தச் 'சிங்கம்', புலிகளின் தாக்குதலில் கொப்பேகடுவ, விமலரத்ன மற்றும் உயர் அதிகாரிகள் பலியான செய்தியைக் கேள்விப்பட்டதும்—

உலகில் "சொற்ப காலமே வாழப் போகும் நாம் — எமக்கிடையில் — ஒருவருக்கு ஒருவர் — ஏன் சண்டையிட வேண்டும்? ஒருவரில் மற்றவர் ஏன் பிழை காண வேண்டும்?— என்று தளதளக்க குரலில் புலம்பியிருக்கிறது! பல்லாயிரக்கணக்கான தமிழர்களைப் படை அதிகாரிகள் பலி கொண்ட போது தட்டிக் கொடுத்த பிரதமருக்கு இப்படிச் சுடலை ஞானம் பிறந்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் சண்டை வேண்டும் என்று சண்டமாருதம் போட்டவர்— சன்னதம் ஆடியவர் — இப்போது ஏன் சண்டை போட வேண்டும் என்று கேட்கிறார்!

இந்த சுடலை ஞானத்துடனாவது வடக்கு-கிழக்கு யுத்தத்தை அரசு நிறுத்த வழி செய்வாரா? பாதுகாப்புத் துணை அமைச்சர் என்ற வகையில் அதற்கான சிபாரிசைச் செய்வாரா? இல்லையேல் சுடலை ஞானம் விடு போனதும் மறந்து போகுமா?

சமசமாஜ-கம்யூ. கட்சிகளை கலைப்பதற்கு நடவடிக்கை

இரண்டையும் ஒன்றிணைத்து புதிய கட்சி அமைக்க முயற்சி

கொழும்பு, ஆக. 11

இலங்கையின் இரண்டு பழமை வாய்ந்த கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் கலைக்கப்பட உள்ளன என்றும் —

இருகட்சிகளிலும் உள்ள தலைவர்கள் சேர்ந்து புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்க உள்ளனர் என்றும் — தெரிவிக்கப்படுகின்றது.

இரு கட்சிகளும் ஒரு கொடியின் கீழும் ஒரு தலைவரின் கீழும் செயற்படும் என்று சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான அத்தாவுட செனவிரத்தினா தெரிவித்துள்ளார்.

இரு கட்சிகளையும் கலைப்பது தொடர்பான திட்டவட்டமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் —

இது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் கே. பி. சில்வாவும் அத்தாவுட செனவிரத்தினாவும் சந்தித்துப் பேச்சுகள் நடத்தினர் என்றும் — 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட தாக்கம் தான் இந்த இரண்டு மார்க்ஸீயக் கட்சிகளின் கலைப்புக்கும் இணைப்புக்கும் காரணமாக அமைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது

சித்தாந்த வேறுபாடு காரணமாக கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலின் காலத்தில் இருந்து முன்னாள் சோவியத் சார்பாகச் செயல்பட்டு வந்தது. ட்ராக்ஸிய சிந்தனையுடன் சமசமாஜக் கட்சி செயல்பட்டு வந்தது.

இதேவேளை —

சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து பொது எதிர்க்கட்சி முன்னணி ஒன்று அமைக்கும் முயற்சி தோல்வி காணுமிடத்து —

புதிதாக உருவாகும் கட்சி, இடதுசாரி நாட்டமுள்ள மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்து ஐக்கிய இடதுசாரி முன்னணி ஒன்றை அமைக்கும் — என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

'கை'ச் சின்னமும் 'நீல' வர்ணமும் பொது எதிர்க்கட்சி முன்னணியின் தேர்தல் அடையாளங்களாக இருக்க வேண்டும் என்று அனுரா பண்டாரநாயக்கா வற்புறுத்துவது தான் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து பொது எதிர்க்கட்சி முன்னணி அமைக்கத் தடையாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

(இ-எ)

பெருமாளை சந்திக்க இந்தியா பயணம்

கொழும்பு, ஆக. 11

சிரேஷ்ட இந்திய அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் வடக்கு—கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் ஆகியோரைச் சந்திக்க ஈ. பி. ஆர். எல். எப் பொதுச் செயலாளரும், எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்தவாரம் இந்தியா பயணமானார் என்று 'சண்டே ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

இவ்வாரம் அவர் கொழும்பு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்க மத்திய செயற்குழு உறுப்பினரான எல். கதிஸ்வரன் ஏற்கனவே இந்தியாவில் தங்கியிருந்து மத்திய, மாநில அரசுகளின் அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் சந்தித்து வருகின்றார் என்றும் —

இ தொ.கா.வுடன் சேர்ந்து ஏழு தமிழ்க்கட்சிகள் தயாரித்த நான்கு அம்ச யோசனைக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் அவர் ஈடுபட்டு வருகின்றார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-ஈ]

சுதந்திரக்கட்சிக்குள் நிலவும் சண்டைக்கு முற்றுப்புள்ளி

கட்சி உறுப்பினர்கள் சிலர் முயற்சி

கொழும்பு, ஆக. 11

சுதந்திரக்கட்சியில் நிலவும் 'உட்சண்டை'யை மிக விரைவில் முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் நடுநிலை வகிக்கும் சுதந்திரக் கட்சி எம்.பிக்கள் ஈடுபட்டுள்ளனர்.

உட்கட்சிச் சண்டையில் எந்தக் கோஷ்டியையும் சேராதவர்களாக 40 சுதந்திரக்கட்சி எம்.பிக்கள் இருக்கின்றனர் என்று தெரிகின்றது.

இவர்களில் 16 எம்.பிக்கள் இரத்தினபுரி மாவட்ட எம்.பி டபிள்யூ. டி. ஜே. செனவிரத்தினாவின் நாவல இல்லத்தில் கடந்த வாரம் கூடி இம்முடிவை எடுத்தனர்.

கே.பி.இரத்னாயக்கா, மங்கள முனசிங்கா, அனில் முனசிங்கா, தர்மசிறி சேனநாயக்கா ஆகியோர் இவர்களில் முக்கியமானவர்கள்.

கோஷ்டிச் சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினர் மீதும் கடுமையான அழுத்தத்தைக் கொடுத்து உட்கட்சிச் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. கட்சிக்குள் பிளவு நீடித்தால் அது எதிர்வரும் தேர்தல்களில் மீண்டும் தோல்வியை சுதந்திரக்கட்சி சந்திக்கவே வழிகோலும் என்று மூன்று மணித்தியாலங்களாக நடந்த அக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. (இ எ)

சிறிமாவோ மலேசியா செல்வார்

கொழும்பு, ஆக. 11

மருத்துவ சிகிச்சைக்காக சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விரைவில் மலேசியா செல்லவிருக்கிறார்.

மலேசியாவிலிருந்து அவர் திரும்பும்வரை சுதந்திரக் கட்சியின் உட்கட்சித் தேர்தல்கள் நடத்தப்படக் கூடாது என்றும்—

இத் தேர்தல்களை அக்டோபர் மாதம் அளவில் நடத்தலாம் என்றும் 'நடுநிலை' சுதந்திரக்கட்சி எம்பிக்கள் நடத்திய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(இ-எ)

கடற்படை தளபதியாக விஜேரத்னா?

கொழும்பு, ஆக 11

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட வடபிராந்திய கடற்படைத் தளபதியின் இடத்துக்கு கொமடோர் பராக்கிரம விஜேரத்னா நியமிக்கப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-5]

வல்வைவாசிக்கு சிறை

கொழும்பு, ஆக. 11

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்தை ஏற்ற வல்வை வாசியான அருணாசலம் சிதம்பரநாதனுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. வி.வி. விக்னேஸ்வரன் 5 வருட காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

[இ-3]

மரணச்சடங்கில் கலந்து கொள்ளுமாறு

கொழும்புத் தமிழர்களுக்கு ரெலோ இயக்கம் அழைப்பு

கவலை தெரிவித்தும் அறிக்கை

புலிகளின் கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவ, மற்றும் கடற்படை அதிகாரிகளின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ளுமாறு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள தமிழர்களை 'ரெலோ' இயக்கம் கேட்டுள்ளதாம்.

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று இப்படி செய்தி வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கும் அர்த்தமற்ற வன்முறைக்கும் எதிரான தமது உள்ளக் கிடக்கையை இதன் மூலம் தமிழ் மக்கள் வெளிப்படுத்த முடியும் என்றும் 'ரெலோ' இயக்கம் தெரிவித்திருக்கிறதாம்.

அதேசமயம் இராணுவ, கடற்படை அதிகாரிகளின் மரணம் குறித்து 'ரெலோ' இயக்கம் அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் தெரிவித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

(இ 5)

ஒத்துழைப்பு கிடைக்குமானால் வங்கி மேலும் சேவையாற்ற முடியும்

ஊழியர் கௌரவிப்பு வைபவத்தில் உரை

வடமராட்சி, ஆக. 10

வங்கி உயர் அதிகாரிகளினது ஒத்துழைப்பும் ஊக்கமும் எமது வங்கிகளுக்கு மேலும் கிடைக்குமானால் யாழ். மாவட்ட இலங்கை வங்கிகள் மக்களுக்கு மேலும் சிறந்த சேவையை ஆற்ற முடியும்.

நெல்லியடி இலங்கை வங்கி அலுவலகத்தில் நடைபெற்ற வங்கி ஊழியர்கள் கௌரவிப்பு வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் யாழ். மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வி. நடராசலிங்கம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. கணேசமூர்த்தி மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் வங்கிகள் செயற்படுகின்றனவா என்ற சந்தேகம் கூட உயர் மட்டத்தில் இருந்துள்ளது.

வங்கிகள் செயற்படாமல் இருந்தால் 1990 இல் யாழ். மாவட்டத்தில் இந்த வங்கி முதலிடம் பெற்றிருக்குமா என நான் [illegible] தெரிய வைத்தேன்.

இந்த [illegible] ஆவணங்கள், தளபாடங்கள், காகிதாதிகள் அனுப்பி வைக்கப்படுவதில்லை; இருந்த போதிலும் வங்கி உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் அயராத முயற்சியால் மக்களுக்கு சிறந்த சேவை கிடைத்து வருகிறது.

இப்படி அவர் கூறினார்.

வங்கி ஊழியர்களுக்கான பரிசுச் சான்றிதழையும், வெற்றிக் கேடயத்தையும் திருமதி கணேசமூர்த்தி வழங்கினார்.

(இ-165)

கருத்தரங்கு

இருதயநோய் பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு நாளை புதன் காலை 9-00 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறும்.

விசேட வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராசா இருதய வியாதி பற்றி கருத்துரை வழங்குவார் [இ-18]

தடை முகாம்

மஸ்கெலியாவில் கினிகத்தேனைக்கும் கித்துல்கலைக்கும் இடையில் தடைமுகாம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

[illegible] சோதனை செய்யப்படுகின்றன. (த)

பலாலியில்

சிப்பாய்களின் பங்கரில் பிள்ளையார் படங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 11

பலாலி விமானத் தளத்தில் நிம்மதியாக இருக்க முடியாத சிப்பாய்கள் தமது மனதை திசை திருப்ப பிள்ளையாரின் படங்களையும் சினிமா நட்சத்திரங்களின் படங்களையும் தமது பங்கர்களில் ஒட்டி வைத்துள்ளனராம்.

இந்தியா டுடேயின் தமிழ்ப் பதிப்பின் ஜூலை 21— ஆகஸ்ட் 5 இதழில் வெளியாகியுள்ள கட்டுரை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விட்டு விட்டுக் கேட்கும் அப்பாச்சிக் சூட்டுச் சத்தங்கள் பீரங்கித் தாக்குதலின் ஓசைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் பலாலி தளத்தில் நிம்மதியாக இருக்கமுடியாத சிப்பாய்கள் தமது மனதை வேறுபக்கம் திருப்ப வழிகண்டுபிடித்துள்ளார்கள்.

அவர்கள் தங்கள் 'பங்கர்'களில் இலங்கை சினிமா நட்சத்திரங்கள், ரஜனிகாந்த் போன்ற தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள், இந்துக் கடவுள்கள்— குறிப்பாக பிள்ளையார் ஆகியோரின் படங்களை ஒட்டி வைத்திருக்கிறார்கள்.

பசுமையை உருவாக்கும் சிறிய முயற்சியாக காய்கறிச் செடிகளை சிலர் வளர்க்கிறார்கள்—

இப்படி அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 11

முழுநிலா நாள் அறிவியற் கருத்தரங்கு நாளை புதன் கிழமை பிற்பகல் 3 - 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்:

யாழ். பல்கலைக்கழக பௌதிக பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கே. கந்தையா இதில் கலந்து கொண்டு 'லேசர்' என்னும் விடயம் பற்றிக் கருத்துரை வழங்குவார்;

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற உள்ள இந்த அறிவியற் கருத்தரங்கு ஒவ்வொரு மாதமும் முழுநிலா நாளில் நடைபெற உள்ளது.

இதன் தொடரிலான முதலாவது கருத்தரங்கே நாளை நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கில் அறிவியல் சம்பந்தமான விடயங்களில் கருத்துக்கள் வழங்கப்பட்டு கலந்துரையாடலும் இடம் பெறும்; (இ)

இந்தியாவின் தடையை எதிர்த்து வாதாட புலிகள் நடவடிக்கை?

இந்திய அரசாங்கம் தம் மீது விதித்திருக்கும் தடையை எதிர்த்து வாதாட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லியில் உள்ள தமது சிறப்புச் செய்தியாளர் எஸ். வெங்கட்நாராயணனை மேற்கோள் காட்டி சண்டே ஐலண்ட் இச்செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

சட்டவிரோத நடவடிக்கைகள் [தடுப்புச்] சட்டத்தின் [1967] கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோதமான அமைப்பாக ஏன் தடை செய்யக்கூடாது என்பதற்கு எழுத்து மூலம் காரணம் காட்டும்படி இந்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு கடந்த ஜூலை முதலாம் திகதி நோட்டீஸ் அனுப்பியிருந்தது.

அத்துடன் சட்டவிரோத நடவடிக்கைகள் [தடுப்பு] சட்டத்தின்படி விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோத அமைப்பாக பிரகடனப்படுத்த போதுமான காரணம் உண்டா, இல்லையா என்பதை விசாரணை நடத்தி தீர்மானிக்க, இந்திய அரசின் தடை உத்தரவு, அதற்கென நியமிக்கப்பட்ட விசாரணை மன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது.

இந்த விசாரணை மன்றத்தின் முன்னால், தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து வாதாட விடுதலைப்புலிகள் இயக்கம் திட்டமிட்டு வருவதாகவும் —

அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க நிர்வாகிகள் புதுடில்லியில் இயங்கும் சட்டவிரோத நடவடிக்கைகள் [தடுப்பு] சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை மன்றத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் சார்பாக விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாட இந்தியாவில் பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானியை சம்மதிக்க வைக்கும் முயற்சியில் அமெரிக்காவில் உள்ள உலக விவகார இன்ஸ்டிடியூட் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடைஉத்தரவை, விசாரணை மன்றம் விசாரணை நடத்தி ஏற்றுக் கொண்டால் மாத்திரமே அந்த உத்தரவு இறுதியானதும் செல்லுபடியானதுமாகும் என்று சட்டவிரோத நடவடிக்கைகள் சட்டம் கூறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

அகதிகளைத் திருப்பி அனுப்பும்

சுவிஸ் அரசின் முயற்சி கைகூடாமற் போகலாம்

இவ்வருட இறுதிக்குள் 200 இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பி வைக்கும் சுவிட்சர்லாந்தின் முயற்சி கைகூடும் வாய்ப்பு இல்லை.

இப்படி நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே ஐலண்ட் செய்தி வெளியிட்டிருக்கிறது:

யாழ். குடாநாட்டில் சகஜ நிலை திரும்பும் வரை இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏனைய தமிழர் அமைப்புகளும் மேற்கு நாடுகளை வற்புறுத்தியுள்ளன என்றும் —

இதனால் முன்னர் திட்டமிட்டபடி 200 அகதிகளை இந்த ஆண்டின் இறுதிக்குள் திருப்பி அனுப்பும் தமது எண்ணத்தை கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் சுவிஸுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (இ-எ)

வயலின் வித்துவான் கொழும்பு வருகை

கொழும்பு, ஆக. 11

இந்தியாவின் பிரபல வயலின் விற்பன்னர் பேராசிரியர் வி. என். கிருஷ்ணன் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்திய சுதந்திரதினக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாகவே அவரது இலங்கை விஜயம் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

வ

இனி ஒரு குறையுமில்லை

நல்லூர்ப்பதி வாழும் நாதனே - அந்த
இல்லைச்சிவ னாரின் பாலனே - எங்கள்
எல்லையில்லாத் துன்பம் எமையே சூழ்ந்தாலும்
கொல்லும்பகை வந்து கொடுமையே செய்தாலும்
சொல்லற்கரி தான சுடர்வேல் இருக்கையில்
இல்லையினி எமக்கு எந்தக் குறையுமே.

- வ. யோகானந்தசிவம்.

யாழ். நகரப் பகுதியில் போலியோ பரவும் அபாயம்

எச்சரிக்கிறார் சுகாதார வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம், ஆக. 11

யாழ் நகரப் பகுதியில் சிறுவர்களிடையே போலியோ பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் எச்சரித்துள்ளார்.

போலியோ என்னும் இளம் பிள்ளைவாத நோய்க்குக் காரணமான வைரஸ் அதன் சுற்று வட்டத்தில் 5 அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை யாழ்ப்பாணத்தில் பரவி, பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. என்றும்— அந்த ஒழுங்கில் இவ்வாண்டும்— போர்ச் சூழ்நிலையில்— அந்நோயின் தொற்று அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு யாழ். குருநகர் பகுதியில் மட்டும் இந்நோயினால் 150 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர்;

போலியோ நோய்க்கான இலகு முறைத் தடுப்பு மருந்து வழங்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ள போதிலும் பெற்றோர்களின் அக்கறையின்மையால் குழந்தைகள் பாதிக்கப்படுவதாகவும் அவர் கவலை தெரிவித்தார்;

கடந்த 17 ஆம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குருநகரைச் சேர்ந்த சிறுமி ஒருத்திக்கு— இந்நோய் ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது இன்னும் ஆய்வு கூடப்பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

என்றாலும் போலியோ பற்றிய சந்தேகம் ஏற்பட்டிருப்பதால் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக குருநகர், பாசையூர் பகுதிகளில் சிறுவர்களுக்குப் போலியோ தடுப்பு மருந்து கொடுக்கும் விசேட

[4 ஆம் பக்கம் பார்க்க]

பிரதமர் ராவின் அழைப்பை நிராகரித்தார் ஜே. ஆர்!

உடல் நிலை காரணமாம்

''வெள்ளையனே வெளியேறு'' இயக்கம் ஆரம்பித்த பொன்விழாவில் கலந்து கொள்ளும்படி இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் விடுத்த அழைப்பை உடல் நிலை காரணமாக முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஏற்கவில்லை.

''86 வயதான நான் பயணம் மேற்கொள்ளக் கூடிய உடல் நிலையில் இல்லை என்று எனது டாக்டர் எண்ணுகிறார். அதனால் தங்கள் அழைப்பை ஏற்று பொன் விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை'' — என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் — 1942 ஆம் ஆண்டில் — 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை ஆரம்பிப்பது என்ற தீர்மானம் எடுக்கப்பட்ட அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் இலங்கைத் தேசிய காங்கிரஸின் பிரதிநிதியாக திரு. ஜெயவர்த்தனா கலந்து கொண்டார். அதற்காகவே திரு. ஜெயவர்த்தனாவுக்கு இந்தியப் பிரதமர் இந்த அழைப்பை அனுப்பியிருந்தார். [உ-எ]

எம்.பிக்களின் வருட ஒதுக்கீடு இனிமேல் மாவட்டங்களுக்கு

கொழும்பு, ஆக. 11

தொகுதி அபிவிருத்தி வேலைகளுக்காக வருடந்தோறும் நாடாளுமன்ற எம். பிக்களுக்கு வழங்கப்படும் தலா 25 லட்சம் ரூபா இனிமேல் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படும். அந்தப் பணம் மாவட்டங்களில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

ஜனாதிபதி பிரேமதாஸா இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். [உ-5]

20 கோடி டொலர் கடன் வழங்க

இலங்கைக்கு உலக வங்கி பல நிபந்தனைகள் விதிப்பு

கொழும்பு, ஆக. 11

புதிதாக 20 கோடி டொலர் கடனை வழங்க உலக வங்கி பல நிபந்தனைகளை இலங்கை அரசுக்கு விதித்துள்ளது.

தகவலறிந்த பொருளாதார ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

அண்மையில் உலக வங்கியின் உயர்நிலைக்குழு ஒன்று கொழும்புக்கு விஜயம் செய்து பேச்சுக்களை நடத்திய பின்னரே இந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

வரி அதிகரிப்புகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்பது அந்நிபந்தனைகளில் ஒன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது. மற்றும் சில நிபந்தனைகள் வருமாறு:-

★ கோதுமை தானியம் மற்றும் மாவு இறக்குமதியில் தனியார் துறைக்கும் இடமளிக்கப்படவேண்டும்.

★ மாவு, பாண், ஆகியவற்றின் மீதுள்ள விலைக் கட்டுப்பாடு நீக்கப்படவேண்டும். தனியார் துறையினர் இப்பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்க அனுமதிக்கப்படவேண்டும்.

★ சீனி இறக்குமதி தாராளமயமாக்கப்படவேண்டும்.

★ இறக்குமதி அனுமதி பெறும் பட்டியலில் இருந்து விவசாய உணவுப் பொருள்கள் அகற்றப்படவேண்டும்

★ செத்தல் மிளகாய், வெங்காயம் ஆகியவற்றின் இறக்குமதி தாராளமாக்கப்படவேண்டும். [உ-எ]

சர்வோதய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேற்றுப்பணிப்பாளர் சரத் ஹேவகமனினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

சர்வோதய ஊழியருக்கு அனுப்பியுள்ள வேலை நீக்க அறிவித்தலில் —

வடக்கு - கிழக்கில் நிவாரணம் மற்றும் புனரமைப்பு வேலைகளை சர்வோதயம் மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்க முடியாதுள்ளதாக வெளிநாட்டு உதவியாளர்கள் கூறியிருப்பதால் சர்வோதய சிரமதான சங்கமய ஊழியர்கள் அனைவரும் சர்வோதய இயக்கத்துடனான தங்கள் கடமைகளை துறக்க வேண்டியேற்பட்டுள்ளது. — என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வேலை நீக்க அறிவித்தலை ஆட்சேபித்து நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்போவதாக சில சர்வோதய ஊழியர் தெரிவித்தனர்.

சர்வோதய இயக்கம் அரசியலில் ஈடுபட்டிருப்பதாலும், வெளிநாட்டு உதவிகளை வடக்கு - கிழக்கில் நிவாரண மற்றும் புனரமைப்பு வேலைகளுக்குச் செலவிடாததாலுமே சர்வோதயத்துக்கான நிதி உதவியை வெட்டுவதற்கு வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் தீர்மானித்திருப்பதாகவும் —

குறைந்த சம்பளத்துடன் பல ஆண்டுகள் தாம் அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் சர்வோதயத்தில் பணியாற்றி வருவதாகவும் அந்த ஊழியர் மேலும் தெரிவித்தனர்.

இப்படி சண்டே ஒப்சேவர் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

சமஷ்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்க் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் கடந்த ஞாயிறு நடைபெறவிருந்த சந்திப்பு ஒத்திப்போடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் கட்சிகள் சமர்ப்பித்திருக்கும் யோசனைகள் குறித்து ஆராய இன்னும் கால அவகாசம் தேவை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் விடுத்த கோரிக்கையை அடுத்தே சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

இணக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கலைக்கப்பட்ட இம்மன்றுகளினால் முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்புகளை இனி காவல் துறையினரே நடைமுறைப்படுத்துவர் என்றும்—

அவற்றை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை காவல் துறையினர் வெகு விரைவில் ஆரம்பிப்பர் என்றும் திரு. நடேசன் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாடுகளைக் காவல் துறையினர் ஆரம்பிக்கும் வரையான கால இடைவெளியில் மேற்படி மன்றுகளினால் முன்னர் வழங்கப்பட்ட தீர்ப்புகளை உதாசீனம் செய்யும் வகையில் யாராவது நடந்து கொண்டால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-5]

நாம்பன்கன்று விற்பனை

வாங்க விரும்புவோர் கூறுவிலையை 1992-08-15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும். கன்றை காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
களாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
[சி-3037]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வீரமரணம்

மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேரடிமோதல் இடம்பெற்றது.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான 2 ஆம் லெப்டினன்ட் பிரிந்தவராஜ் [சின்னத்தம்பி குலேந்திரன் — கொக்கட்டிச்சோலை] விடுதலைபுலிகளின் ஆதரவாளரான ரூபன் [யோகநாதன் ரூபகுமார் — மட்டக்களப்பு] ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

அதேவேளை — நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் பாம்புதீண்டியதில் போராளியான லெப். முரளிதரன் [தர்மரத்தினம் ரவிச்சந்திரன் — வாழைச்சேனை] மரணமடைந்தார். [உ-3]

இன்று

கொழும்புத்துறை ஆக. 11

யாழ். மாநகரசபை, தேசிய வீடமைப்பு திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட கிராம மட்டத்திலான சமூக மேம்பாட்டுக்குழுவின் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். மாநகர சபை அலுவலகத்தில் ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும். (உ-30)

நாளை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு பேரவைச் செயலகத்தில் நடைபெறும்.

★ ★ ★

நல்லூர் திருவிழாக்காலங்களில் சேவை புரியும் மக்கள் நலன்புரிக் கழகத் தொண்டர்களுக்கும் ஊர்காவற்துறை பிரிவு செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களுக்குமான கூட்டம் ஒன்று நாளை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் அலுவலகத்தில் நடைபெறும்.

நல்லூரில் இன்று

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் 9 ம் திருவிழாவான இன்று — செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் விவரம் வருமாறு:—

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப்பந்தலில் (மாலையில்) — பொன் ஸ்ரீவாமதேவவின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) — கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்யானந்தசர்மா நிகழ்த்தும் ''தாரகன்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு - கந்தபுராணப்படிப்பு. பிற்பகல் 3.00 மணிக்கு - பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. (உ-30-126)

விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் மாவீரர் தடகள விழாவின் தியாகி திலீபன் நினைவுக் கேடயத்திற்கான ஆண்கள், பெண்களுக்குரிய சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி ஆகியவற்றிற்கு விண்ணப்பிக்கும் தினம் எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின்...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கின்றது.

இதற்கிடையில்—

விடுதலைப் புலிகளுக்கு தடைவிதிக்கப்பட்டதை ஆட்சேபித்து பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த தீரன், தமிழ் தேசியக் கட்சியைச் சேர்ந்த பி. நெடுமாறன் ஆகியோர் இந்த விசாரணை மன்றத்தின் முன்னர் நேற்று தனித்தனி மனுக்களைத் தாக்கல் செய்தனர் என்று நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

யாழ் நகரப்...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலையங்கள் அமைக்கப்பட்டு, நாளை முதல் அவர்களுக்குத் தடுப்பு மருந்து [illegible] பணி ஆரம்பிக்கப்பட [illegible] தாக டாக்டர் [illegible] ரன் தெரிவித்தார். [உ-5]

ஐ. நா. தூதரகத்தின்

அதிகாரிக்கு அனுமதி மறுப்பு மண்டபம் முகாம் செல்ல!

லண்டன், ஆக. 11

புதுடில்லியில் உள்ள ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரியான லிம் நேற்று சென்னை வந்தார்.

ஈழத் தமிழ் அகதிகள் சுமார் ஆறாயிரம் பேர் தங்கியிருக்கும் இராமேஸ்வரம் மண்டபம் முகாமுக்குச் செல்வதற்காக அவர் புறப்பட்டார் என்றும் —

எனினும் அவர் நேற்று சென்னையிலிருந்து ரயில் ஏறும்வரை மண்டபம் முகாமுக்குச் சென்று அதனைப் பார்வையிடுவதற்கான அனுமதி அவருக்கு தமிழக அரசால் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பலவந்தமாக தாங்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட விருப்பதாக மண்டபம் முகாம் அகதிகள் முறையீடு செய்திருப்பதை அடுத்தே அவர் அந்த முகாமுக்குச் செல்ல முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை திரும்பும் அகதிகளை இராமேஸ்வரத்தில் வைத்துச் சந்திக்க மட்டுமே ஐ. நா அமைப்புக்கு இந்தியா அனுமதி வழங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. [உ-8]

தீவகம் திரும்பினர்

யாழ்ப்பாணம் ஆக. 11

தீவகப்பகுதியில் இருந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறவந்த நோயாளர்களும், அவர்களது உதவியாளர்களுமாக மொத்தம் ஏழு பேர் நேற்று குமண கப்பல் மூலம் தீவகம் திரும்பினர்.

இவர்கள் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து கடற்படைக்கப்பல்மூலம் தீவுப்பகுதிக்கு அழைத்துச்செல்ல ஏற்பாடாகியிருந்தது.

தீவகத்திலிருந்து மற்றுமொருதொகுதி நோயாளர்கள் இன்று குமண கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்துவர ஏற்பாடாகியுள்ளது. [உ-8]

'சுப்பசோனிக்'...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிழித்துக்கொண்டு பறந்த சுப்பசோனிக் விமானங்களின் சத்தத்தைக் கேட்டு கிலி கொண்ட யாழ். மக்கள், படுக்கைகளிலிருந்து எழும்பி விழுந்தடித்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர்.

நிலத்தில் படுத்தனர்

முதற்குண்டு நாவற்குழியில் கண்டி வீதிப்பகுதியில் விழுந்து வெடித்ததும் அப்பகுதியூடாக சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வழிப்போக்கர்கள் ஆங்காங்கே நிலத்தில் விழுந்து படுத்ததால் ஏனைய குண்டுகளின் சிதறல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள முடிந்தது.

தொடர்ந்து இரு விமானங்களும் மாறி மாறி அப்பகுதியில் ஆறு குண்டுகளை வீசின.

இரண்டு குண்டுகள் கண்டி வீதியில் — கண்ணாடித் தொழிற்சாலைக்கு முன்பாக — வீதியின் ஓரமாக இருந்த சிறிய நீர் குட்டையினுள் விழுந்து வெடித்துள்ளன.

வீசப்பட்ட குண்டுகளில் மேலும் மூன்று அப்பகுதியில் கண்டி வீதிக்கு அருகே தென்னை மற்றும் பனைமரக் கூடல்களின் கீழ் குடிமனைகள் நிறைந்த பகுதியில் விழுந்து வெடித்து நிலத்தில் பெரும் குழிகளை ஏற்படுத்தி உள்ளன.

குடிமனைகள் உட்பட அவ்விடத்தில் அமைந்த அனைத்து வீடுகளுமே சேதமடைந்தன.

வீசப்பட்ட மற்றொரு குண்டு வெடிக்காத நிலையில் பின்னர் மீட்கப்பட்டது.

இளம் தாய் பலி

தனது குடிசையின் முற்றத்தைப் பெருக்கிக் கொண்டு நின்ற மூன்று பிள்ளைகளின் தாயாரான சின்னத்துரை ஈஸ்வரி [வயது 26] குண்டுச் சிதறல்களால உடல் சிதைவுண்டு மரணமானார். அவரது கணவரான சின்னத்துரை [வயது 30], மகனான சின்னத்துரை ராஜீவ் [வயது 9] ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மற்றைய பிள்ளைகளான ராஜியா [வயது 7], சுஜி [வயது 5] மற்றும் இ. கிருஷ்ணகுமார் [வயது 22] ஆகியோரும் காயமுற்றனர்.

கண்ணால் தேடிக் கண்டு பிடிக்க முடியாத வேகத்தில் இந்த விமானங்கள் வானை வட்டறுத்து அங்கும் இங்கும் பறந்து சென்றமை மக்களை மேலும் பயமடையச் செய்தன.

விமானத்தை காணமுடியாமல் அவற்றின் இரைச்சலை மட்டும் கேட்டு மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

விமானத்தில் இருந்து ஒரே தடவையில் சமாந்தரமாக இரண்டு குண்டுகள் தள்ளப் [illegible] இருந்து கண்டதாக [illegible] [உ-3-5-13-117-140-162]

முகம்மதுவின் மருமகனுக்கு தூதுவர் பதவி

கொழும்பு. ஆக. 11

சபாநாயகர் எம். எச். முகம்மதுவின் மருமகன் ஒருவர் பங்களாதேஷுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

132 அகதிகள் திரும்பினர்

சென்னை, ஆக 11

132 ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று நேற்று பிற்பகல் சென்னையில் இருந்து திருகோணமலைக்கு திரும்பியது. (உ-எ)

31 பேர் பலி

சண்டிகார், ஆக. 11

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கிய தீவிரவாதிகள் நேற்று 31 பேர்களைச் சுட்டுக்கொன்றனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் மாநிலப்பொலீஸாரின் உறவினர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

தெற்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் ஆத்திரமுற்றவர்களாகக் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டைப் போல இனக் கலவரம் ஒன்று வெடித்துவிடுமோ என்ற அச்சம் பரவலாக நிலவியதாகவும் செய்தி ஏஜன்ஸிகள் தெரிவித்தன. [அ-எ-10]

கொப்பேயி...

[1 ஆம் பக்க தொடர்ச்சி]

''அன்புக்குரிய தளபதி கொப்பேகடுவ உயிரிழந்ததற்கு அரசே பொறுப்பு'' என்று கூறிக்கொண்டு இளைஞர்களும், பௌத்த பிக்குகளும் கற்களையும் செங்கட்டிகளையும் வீசிக் குழப்பம் செய்தனர்.

மூன்று அமைச்சர்களை நோக்கி கூட்டத்தினர் கற்களை வீசினர். இதனால் காவல் துறை துணை அமைச்சர் ரணசிங்கவின் கழுத்தில் காயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்தது. கூட்டத்தினரின் ஆவேசத்திலிருந்து தப்புவதற்காக அமைச்சர்கள் ஓடித் தப்பவேண்டியிருந்ததாக செய்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

அமைச்சர்களைக் காப்பாற்றுவதற்காக அவர்களது மெய்ப்பாதுகாவலர்கள் பல தடவைகள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர்.

அரச ஆதரவாளர்களான பல பிரமுகர்கள் நையப்புடைக்கப்பட்டனர்; பல வாகனங்கள் நொறுக்கப்பட்டன.

பொலீஸார் வந்து நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளில் வெளிநாட்டுத் தூதுவர்கள், அமைச்சர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள், படைத் தளபதிகள், உயரதிகாரிகள் என பெரும் எண்ணிக்கையான பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ஜனாதிபதியும் பிரதமரும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர்கள் அங்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அராலித்துறை கண்ணிவெடியில் உயிரிழந்த மற்றப் படைத் தளபதிகளின் இறுதிச் சடங்குகளும் நேற்று நடைபெற்றன. [ஆ-உ-எ-3-1]

மரண அறிவித்தல்கள்

சண்முகரத்தினம் சுதாகரன்

காரைநகர் விளானையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், 408, கே. கே. எஸ். வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகரத்தினம் உமாதேவி தம்பதிகளின் புதல்வன் சுதாகரன் 10-08-92 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் கந்தையாவினதும் சுந்தரம்மாவினதும், கிளிநொச்சி முருகன் ஸ்ரோஸ் முன்னாள் உரிமையாளர் - காலஞ்சென்ற பொன்னம்பலம் சதாசிவத்தினதும், சிவகாமிப்பிள்ளையினதும் அன்புப்பேரனும், விஜயரூபி, கலாரூபி, ஜெயரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருபானந்தம், பரமசாமி, நடராசா, புவனேஸ்வரி, சரோஜினிதேவி, யோகராணி, மங்கையர்க்கரசி ஆகியோரின் பெறாமகனும், மோகனாம்பிகையின் மருமகனும், யாழ்ப்பாணம் முருகன் ஸ்ரோஸ் பங்காளர்களாகிய உருத்திரசிங்கம், தேவராசா, நவரத்தினம், காலஞ்சென்ற விநாயகசிவம், சிவஞானம், பரமானந்தசிவம், பராசக்தி, சிதம்பரம் புவனேஸ்வரி, Dr. ஆதிசக்தி, கமலாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் மருமகனும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 11-08-92 இன்று செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

408, கே. கே. எஸ். றோட், க. சண்முகரத்தினம்
யாழ்ப்பாணம். [22117]

செல்லத்துரை தேவராசா

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மூளாய் சிறீ முருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான திரு. செல்லத்துரை தேவராசா [S M S.] அவர்கள் [1992-08-09] ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் புஸ்பதேவியின் அன்புக் கணவரும், புஸ்பராஜா [சிறீ முருகன் ஸ்ரோர்ஸ்], ஜீவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி [நியூ புவனேஸ்வரி மெடிக்கல், யாழ்ப்பாணம்], பாலசிங்கம் [சிறீ முருகன் மெடிக்கல், நெல்லியடி], கிருஷ்ணசாமி [சிறீ முருகன் மெடிக்கல், பருத்தித்துறை], விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆறுமுகம் செல்லம்மாவின் அன்பு மருமகனும், தவமணிதேவி, சற்குணதேவி, கமலாதேவி, பத்மாதேவி, கிருபைநாதன் [டோசா] ஆகியோரின் மைத்துனரும், ராஜேந்திரனின் [சுவிஸ்] அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [1992-08-09] ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் தொல்புரம் மத்தியில் நடைபெற்று, பூதவுடல் மூளாய் பித்தனை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

தொல்புரம் மத்தி, தே. புஸ்பராஜா
சுழிபுரம். [5249] [மகன்]

பிரம்மஸ்ரீ தியாகராசக் குருக்கள் சுந்தரமூர்த்திஐயா

[இளைப்பாறிய ஆசிரியர்]

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரம்மஸ்ரீ தி. சுந்தரமூர்த்திஐயா சிவபதமடைந்து விட்டார். அன்னார் அன்னபூரணேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரம்மஸ்ரீ தியாகராசக் குருக்கள், பிரம்மஸ்ரீ சுந்தரராசசர்மா [ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை], வரதராசசர்மா [ஆசிரியர்], மகாதேவி, செந்திலராசசர்மா (ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை), கிருஷ்ணராசசர்மா, தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-8-92) செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணியளவில் அளவெட்டி கும்பிழாவளையில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கும்பிழாவளை, சு. செந்தில்ராசசர்மா
அளவெட்டி. (22119) (மகன்)

கோவிந்தர் இராசையா

மலேசியாவில் வசித்த (Klang, Malaysia) கோவிந்தர் இராசையா காலமானார். இவர் காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி கோவிந்தர் அவர்களின் அருமை மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற ராஜகாரியர், காலஞ்சென்ற சிவரட்ணம், காலஞ்சென்ற நல்லையா, காலஞ்சென்ற தம்பிராஜா, திருமதி அம்பலம், திருமதி செல்வரட்ணம், தேவதாசன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

தகவல்:

மில்ரெட் ராசமலர் செல்வராஜா
[5248] (மகள்)

முத்தர் கந்தையா

காரம்பன் கிழக்கைச் சேர்ந்த முத்தர் கந்தையா காலமானார். அன்னார் நீலாம்பிகையின் அன்புக்கணவரும், திருமதி இந்திரா, ஜெகநாதன் (கொழும்பு), விஜயரெட்டினம் (கொழும்பு), திருமதி சந்திரா, அரியரட்ணம் [லண்டன்], ஈஸ்வரநாதன் [ஜேர்மனி], கோபிநாதன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகடாட்சம் (Sivagadadeham & Co), திருமதி பத்மாவதி, திருமதி முத்துமலர் இராஜேந்திரா (Commercal Supriutendent Telecommunication), திருமதி மரியன் [லண்டன்], திருமதி கௌசலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிறீகாந்தி, சிவகாந்தி, ரதேஷா, தயோராணி, லக்ஷ்மணன், மில்சன், அருட்குமரன், ரமணன், சுகிதா, சிறீகரன், சிறீதரன், ஜெயசித்ரா, சசிகரன், ஜசிந்திரா [சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], மயூரா, ரூபன், ஜசிந்திரா [லண்டன்], கலைச்செல்வி, தர்ஷியா, தமாரா [அவுஸ்ரேலியா], ஆகியோரின் அன்புப் பேரனும், சிந்துஜா, தனுஜா, ருக்மன் ஆகியோரின் அன்புப் பூட்டனும், இராசலிங்கம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வீரவேங்கை கில்மன் [ரகு] அவர்களின் வளர்ப்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-8-92 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் 38, கண்டி வீதி சுண்டுக்குளியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

38, கண்டி வீதி, இ. சந்திரா (மகள்)
சுண்டுக்குளி [22120] க. ஜெகநாதன் (மகன்)